[2010 ஏப்ரல் 26

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி.

திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல இன்று தமிழ்நாட்டிலுள்ள சத்துணவுக் கூடங்களுக்கெல்லாம் எரிவாயு அடுப்பு வழங்கப்படுவதாக அரசு அறிவித்துள்ளது. இன்னும் எத்தனை சத்துணவுக் கூடங்களுக்கு எரிவாயு அடுப்பு வழங்கப்பட வேண்டும்? அதேபோல, தமிழ்நாட்டில் இன்னும் எத்தனை சத்துணவுக் கூடங்கள் கட்டப்படாமல் இருக்கின்றன? அவற்றையெல்லாம் கட்டுவதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களுக்கு எரிவாயு அடுப்பு வழங்கப்படுவது படிப்படியாகச் செயற்படுத்தப்பட்டு வருகிறது. தொடக்கத்தில் 750 மையங்களுக்கு வழங்கப்பட்டு இதுவரை 2755 மையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இப்போது படிப்படியாகச் செயற்படுத்தப்பட்டு வருகிறது. அதுபோல, சத்துணவுக் கூடங்களுக்கு, சத்துணவு சமையலறைக் கட்டடங்கள் கட்டுவதற்கு இந்த ஆண்டு நம்முடைய தமிழக முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் 9045 சத்துணவு சமையலறைக் கட்டடங்கள் கட்டுவதற்கு 200 கோடி ரூபாயை (மேசையைத் தட்டும் ஒலி) ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 99, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

99—

நிதி ஒதுக்கீடு

***62188—திரு. கு. ஹசன் அலி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரத்தில் இந்நிதியாண்டில் ஆதி திராவிடர் நலப்

2010 ஏப்ரல் 26]

பள்ளி துவக்கவும், அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யவும் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இராமநாதபுரத்தில் ஆதி திராவிடர் நலத் துவக்கப் பள்ளி துவக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி, இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுர ம், ஆதி திராவிட மக்கள் நிறைந்து வசிக்கிற பகுதி. அங்கே பள்ளியைத் துவக்குவதற்கு மறு பரிசீலனை செய்து அந்தப் பள்ளிக்கூடத்தைத் துவக்கி வைப்பாரா என மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய ஆரம்பப் பள்ளிகள் துவக்கும் திட்டம் பள்ளிக் கல்வித் துறையால் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி தேவையுள்ள, ஆதி திராவிட மக்கள் குடியிருக்கின்ற பகுதிகளில், முன்னுரிமை அளித்து புதிய ஆரம்பப் பள்ளிகள் ஆண்டுதோறும் துவக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, ஆதி திராவிடர் நலத் துறையின்மூலமாக இராமநாதபுரத்தில் ஆதி திராவிடர் நல துவக்கப் பள்ளி துவக்கும் திட்டம் இல்லை. அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்மூலம் புதிய துவக்கப் பள்ளி முன்னுரிமை அடிப்படையில் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப் பரிந்துரைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

[2010 ஏப்ரல் 26

திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறையில், மணக்குடி ஊராட்சியிலே ஒரு ஆதி திராவிடர் பள்ளி அமைந்திருக்கிறது. இது ஆரம்பப் பள்ளியாக இருக்கிறது. இது நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தரப்பட வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகின்றோம். குறிப்பாக, பள்ளிக் கல்வித் துறையின்மூலம் இயக்கப்படுகின்ற பல பள்ளிகள் தரம் உயர்த்தப்படுகின்றன. இந்தப் பகுதியில் ஆதி திராவிட மாணவச் செல்வங்கள் அதிகமாகப் படிக்கக்கூடிய பள்ளியாக இது உள்ளது. இந்த ஆண்டு, இந்தப் பள்ளியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறப்பினமாகக் கருதி, தரம் உயர்த்தித் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிதிநிலைக்கேற்பப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 100, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்.

100—

தொழிற்பேட்டை

***71430—திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?